# රාජ්‍ය භාෂා දෙපාර්තමේන්තුව

# அரசகரும மொழிகள் திணைக்களம்

# DEPARTMENT OF OFFICIAL LANGUAGES

# 2025

## වාර්ෂික කාර්යසාධන වාර්තාව

## வருடாந்த செயற்திறன் அறிக்கை

## Annual Performance Report

අධිකරණ හා ජාතික ඒකාබද්ධතා අමාත්‍යාංශය

# நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு

**Ministry of Justice and National Integration**


**அரசகரும மொழிகள் திணைக்களம்**
**இல**,7/341 .
**கோட்டே வீதி**,
**இராஜகிரிய**

தொலைபேசி - 0112888934
தொலைநகல் - 0112888928
மின்னஞ்சல் முகவரி - languages.dept.ad04@gmail.com
இணையதள முகவரி - www.languagesdept.gov.lk

# உள்ளடக்கம்


**01. ஆம் அத்தியாயம் - நிறுவனத்தின் விவரம்**

| | | |
|---|---|---|
| 1.1. | அறிமுகம் | 04 |
| 1.2. | நிறுவனத்தின் நோக்கு, செயற்பணி, நோக்கங்கள் | 05 |
| 1.3. | திணைக்களத்தினால் நிறைவேற்றப்படும் பிரதான பணிகள் | 06 |
| 1.4. | அரசகரும மொழிகள் திணைக்களத்தின் தாபனக் கட்டமைப்பு | 07 |
| 1.5. | திணைக்களத்தின் பிரிவுகளின் அறிமுகம் | 08 |

**02. ஆம் அத்தியாயம் - முன்னேற்றம் மற்றும் எதிர்கால கண்ணோட்டம்**

| | | |
|---|---|---|
| 2.1. | 2025 ஆம் ஆண்டில் திணைக்களத்தின் முன்னேற்றம் | 09-26 |
| 2.2. | திணைக்களத்தின் எதிர்கால இலக்குகளும் சவால்களும் | 27 |
| 2.3. | அரசகரும மொழிகள் ஆணையாளர் நாயகத்தின் செய்தி | 28 |

**03. ஆம் அத்தியாயம் - 2025 ஆம் ஆண்டிற்கான நிதி செயலாற்றுகை**

| | | |
|---|---|---|
| 3.1. | நிதி செயலாற்றுகை கூற்று | 29 |
| 3.2. | நிதி நிலைமை கூற்று | 30 |
| 3.3. | நிதிப் பாய்ச்சல் கூற்று | 31 |
| 3.4. | வருமான சேகரிப்பு செயலாற்றுகை | 32 |
| 3.5. | ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயலாற்றுகை | 32 |
| 3.6. | நி.பி. குறிப்பு 208 இன் பிரகாரம் ஏனைய அமைச்சுக்கள்/ திணைக்களங்களின் முகவராக இத் திணைக்களத்திற்கு/ மாவட்டச் செயலகத்திற்கு/ மாகாணச் சபைக்கு அளிக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு | 32 |
| 3.7. | நிதி அல்லாத சொத்து அறிக்கையிடல் செயலாற்றுகை | 33 |
| 3.8. | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | 34-42 |

**04. ஆம் அத்தியாயம் - செயலாற்றுகைச் சுட்டிகள்**

| | | |
|---|---|---|
| 4.1. | நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டிகள் | 43-46 |

**05. ஆம் அத்தியாயம் - பேண்தகு அபிவிருத்திக் குறிக்கோள்களைப்(SDG) பூர்த்தி செய்யும் செயலாற்றுகை**

| | | |
|---|---|---|
| 5.1. | அடையாளம் காணப்பட்ட உரிய நிலைபேறான அபிவிருத்திக் நோக்கங்கள் | 47 |
| 5.2. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைதலும் சவால்களும் | 49 |

**06. ஆம் அத்தியாயம் - மனித வளக் கட்டமைப்பு**

| | | |
|---|---|---|
| 6.1. | பதவியணி முகாமைத்துவம் | 50 |
| 6.2. | நிறுவனத்தின் செயலாற்றுகையில் மனித வளப் பற்றாக்குறை அல்லது மிகை ஏற்படுத்தும் தாக்கங்கள் | 51 |
| 6.3. | பதவியணியினரின் திறன் விருத்தி | 52-58 |

**07. அத்தியாயம் - இணக்கப்பாட்டு அறிக்கை** **59-65**

# 01. ஆம் அத்தியாயம் - நிறுவனத்தின் விவரம்

## 1.1. அறிமுகம்

1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிகள் சட்டத்தை அமுல்படுத்தும் நிறுவனமாக 1956.10.01 ஆம் திகதி அரசகரும மொழிகள் திணைக்களம் தாபிக்கப்பட்டது. மொழிகளின் பாவனை, அம்மொழிகளை மேம்படுத்தல் மற்றும் பேணிப் பாதுகாத்தல் சம்பந்தமாக அரசாங்கத்தினால் எடுக்கப்படுகின்ற தீர்மானங்கள் ஒரு நாட்டில் அமுல் செய்யப்படுகின்ற அரசகரும மொழிக்கொள்கை ஊடாகவே பிரகடனப்படுத்தப்படுகின்றது. இலங்கைப் போன்ற பல்லினங்கள் வாழும் பலமொழிகள் பேசும் சமூகங்களுக்கு மத்தியில் ஒற்றுமையும் நல்லிணக்கத்தையும் கட்டியெழுப்புவதற்கு அரசகரும மொழிக்கொள்கை பெரிதும் உறுதுணையாக அமைகின்றது. பொது மக்களின் மொழிப் பயன்பாட்டிற்குத் தேவையான வசதிகளை வழங்குவதற்கும் அவர்களது மொழி உரிமையை பாதுகாப்பதற்கும் அதே போன்று கலாசாரங்களை வலுப்படுத்துவதற்கும் இதனூடாக வழிவகுக்கப்படுகின்றது.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் III ஆம் அத்தியாயத்தின் 12 (2) உறுப்புரை மூலம் மொழி ஓர் அடிப்படை உரிமையாக குறிப்பிடப்பட்டிருப்பதுடன், எந்தவொரு குடிமகனும் மொழி அடிப்படையில் பாரபட்சமாகவோ அல்லது விசேட நடாத்துகைக்கோ உட்படுத்தப்படுதலாகாது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், அங்கு IV ஆம் அத்தியாயத்தில் மொழி பற்றிய அடிப்படைச் சட்டம் குறிப்பிடப்பட்டிருப்பதுடன், 1987 ஆம் ஆண்டு 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தம் மூலம் சிங்களம் மற்றும் தமிழ் மொழி ஆகிய இரண்டு மொழிகளும் இலங்கையின் அரசகரும மொழிகளாகவும் (18 (2) ஆம் உறுப்புரை), ஆங்கிலம் இணைப்பு மொழியாகவும் (18 (3) ஆம் உறுப்புரை) பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் 19 ஆவது உறுப்புரையின் பிரகாரம் சிங்கள மொழியும் தமிழ் மொழியும் இலங்கையின் தேசிய மொழிகளாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

அரசகரும மொழிக் கொள்கையை வினைத்திறனுடன் அமுல் செய்யும் வகையில் காலத்திற்கு காலம் பல்வேறு சுற்றறிக்கைகள் வெளியிடப்படுகின்றன. மேற்படி சுற்றறிக்கை ஏற்பாடுகளின் கீழ் அரச/ மாகாண அரச உத்தியோகத்தர்கள் மற்றும் பகுதியளவிலான அரசநிறுவனங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்காக மொழித் தேர்ச்சிப் பரீட்சைகள் மற்றும் மொழிப் பயிற்சி பாடநெறிகளை நடாத்துதல், அரசின் உத்தியோகபூர்வ மொழிபெயர்ப்பாளர் என்ற வகையில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் மொழிபெயர்ப்புப் பணிகளை நிறைவேற்றுதல், கலைச் சொற்றொகுதிகளைத் தொகுத்தல் மற்றும் மொழிகளைக் கற்பதற்கான உசாத்துணைகளை தொகுத்தல், அத்துடன் மொழியாற்றலுடன் கூடிய சமூகமொன்றை கட்டியெழுப்புவதற்காக மொழி மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களை திட்டமிடுதல் முதலான பணிகள் அரசகரும மொழிகள் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்படுகின்றன. சமாதானமும், நல்லிணக்கமும் நிறைந்த மும்மொழி சமூகத்தைக் கட்டியெழுப்புவதை அடிப்படையாகக் கொண்டு, அதற்குரிய நடவடிக்கைகளை அமுல் செய்வதும் அதேபோன்று பொதுமக்களுக்கு வினைத்திறன் மிக்கதும், விளைவுப் பெருக்கமுடையதுமான சேவைகளை வழங்குவதும் அரசகரும மொழிகள் திணைக்களத்தின் அடிப்படை நோக்கமாகும்.

தற்போது நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சின் கீழ் நிர்வகிக்கப்படும் இத் திணைக்களம் "வளமான நாடு - அழகான வாழ்வு" என்ற அரசாங்கத்தின் தேசிய கொள்கைப் பிரகடனத்திற்கு இணங்க, "இலங்கைத் தேசம் – உலகமயக் குடிமகன்" என்ற எண்ணக்கருவின் கீழ், "அனைத்து பிரசைகளுக்கும் தமது சொந்த மொழியில் சேவைகளைப் பெற்றுக்கொள்ளக்கூடியவாறு தேசிய மொழிக் கொள்கையொன்றை அமுல் செய்வதற்கும், இலங்கையில் வாழும் பல்வேறு இனங்களுக்கிடையில் மொழித் தடைகளை குறைப்பதற்கும், அரச நிறுவனங்களிலும் பொது இடங்களிலும் செயற்கை நுண்ணறிவு (AI) மூலம் வலுவூட்டப்பட்ட பலமொழி தொடர்பாடல் முறைமைகளை நிறுவுதல் சம்பந்தமான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல்" எனும் கொள்கைகளுக்கு திணைக்களத்தின் விடயப்பரப்பு வடிவமைக்கப்பட்டுள்ளது.

2024 **ஆம் ஆண்டின்** 44 **ஆம் இலக்க அரச நிதி முகாமைத்துவச் சட்டத்திற்கு** அமைவாக **அரசகரும மொழிகள் திணைக்களத்தினால்** 2025 ஆம் வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளை உள்ளடக்கித் தயாரிக்கப்பட்ட **வருடாந்த செயலாற்றுகை அறிக்கையும் மற்றும் கணக்கு விபரங்களும் அடங்கிய அறிக்கை இதன் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்றது**.

## 1.2. நிறுவனத்தின் நோக்கு, செயற்பணி, நோக்கங்கள்

**நோக்கு**

சகவாழ்வுடன் கூடிய சமாதானமான மும்மொழி சமூகம்

**செயற்பணி**

இனங்களுக்கிடையிலான ஒற்றுமையையும், சமாதானத்தையும் அடைவதைக் குறிக்கோளாகக் கொண்டு அரசகரும மொழிகள் கொள்கையை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்கான வசதிகளை வழங்குதலும் ஒருங்கிணைத்தலும்

**நோக்கங்கள்**

**சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் விரும்பிய மொழியில் சேவையைப் பெற்றுக் கொள்வதற்கு பொதுமக்களுக்கான உரிமையைப் பாதுகாப்பதன் பொருட்டு அரச அலுவலர்களின் மொழித் தேர்ச்சியை மேம்படுத்துதல்.**

**அரசின் உத்தியோகபூர்வ மொழிபெயர்ப்பாளர் என்ற வகையில் வினைத்திறனான மொழிபெயர்ப்பு சேவைகளை வழங்குவதை உறுதிப்படுத்தல்.**

**தேசிய மொழிகளை மேம்படுத்துவதற்கும், கற்பதற்கும், பயன்படுத்துவதற்கும் நவீன தொழில்நுட்பங்களை உபயோகித்து வசதிகளை வழங்குதல்.**

**தேசிய மற்றும் சர்வதேச மொழியாற்றலை மேம்படுத்துவதற்காக பாடநெறிகளை ஒழுங்கு செய்தல்.**

## 1.3. திணைக்களத்தினால் நிறைவேற்றப்படுகின்ற பிரதான பணிகள்

1. அரச மற்றும் பகுதியளவிலான அரச நிறுவனங்களின் மொழிபெயர்ப்புப் பணிகளை நிறைவேற்றுதல். (சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம்)
2. அரச நிறுவனங்களில் பொதுவாகப் பயன்படுத்தப்படுகின்ற படிவங்களை மும்மொழிகளில் தயாரித்தல்.
3. பல்கலைக்கழகங்களிலும் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களிலும் மொழிபெயர்ப்புப் பாடநெறிகளைப் பயில்வோரை தெளிவூட்டலும் அவர்களுக்கான செயன்முறை பயிற்சிகளை அளித்தலும்.
4. பல்வேறு துறைகள் சார்ந்த்தாக சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கிலக் கலைச் சொற்றொகுதிகளை தொகுத்தல்.
5. 18/2020 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கைக்கும், 1/2023 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கைக்கும் அமைவாக தேசிய மொழித் தகைமை மதிப்பீட்டு பரீட்சைகளை (NLQ) நடாத்துதலும் தெளிவூட்டல் நிகழ்ச்சிகளை நடாத்துதலும்.
6. இத் திணைக்களம் சார்பிலும் அதே போன்று வெளி நிறுவனங்கள் சார்பிலும் ஆட்சேர்ப்புப் பரீட்சைகளை நடாத்துதலும், மொழித்தேர்ச்சிப் பரீட்சைகளை நடாத்துதலும்.
7. அரசகரும மொழித்தேர்ச்சியினைப் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கும் அரச உத்தியோகத்தர்கள் சார்பில் 18/2020 ஆம் இலக்க அரச நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் சிங்களம் மற்றும் தமிழ் மொழிப் பாடநெறிகளை நாடுபூராகவும் நடாத்துதல்.
8. அரசகரும மொழித்தேர்ச்சியினைப் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கும் பகுதியளவிலான அரச உத்தியோகத்தர்கள் சார்பில் 1/2023 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கையின் பிரகாரம் சிங்களம் மற்றும் தமிழ் மொழிப் பாடநெறிகளை நாடுபூராகவும் நடாத்துதல்.
9. நவீன தொழில்நுட்ப முறைகளை பயன்படுத்தி சிங்களம், தமிழ், ஆங்கிலம் மற்றும் வெளிநாட்டு மொழிகளை கற்பித்தலும் பரீட்சைகளை நடாத்துதலும்.
10. மத நல்லிணக்கத்தை மேம்படுத்தும் பொருட்டு மொழி பயன்பாட்டை ஊக்குவிக்கும் நிகழ்ச்சிகளை நடாத்துதல்.
11. தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த மொழித் தினங்களைக் கொண்டாடுதல்.
12. வெளி நிறுவனங்களினால் முன்வைக்கப்படுகின்ற கோரிக்கைகளுக்கு அமைவாக மொழிக் கற்கைநெறிகளை நடாத்துதலும், மொழி மேம்பாட்டு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தலும்.
13. மொழி மேம்பாட்டுடன் தொடர்புடைய திணைக்கள வெளியீடுகளைத் தொகுத்தலும், விற்பனை செய்தலும்.

## 1.4. அரசகரும மொழிகள் திணைக்களத்தின் தாபனக் கட்டமைப்பு



## 1.5 அரசகரும மொழிகள் திணைக்களத்தின் பிரதான பிரிவுகள்





- மொழிபெயர்ப்புப் பிரிவு
- கலைச் சொற்றொகுதி தொகுப்புப் பிரிவு
- மொழி ஆய்வுகூடம்
- பரீட்சைப் பிரிவு
- மொழி ஆராய்ச்சி மற்றும் நூல் தொகுப்புப் பிரிவு
- கணக்கீட்டு / நிதிப் பிரிவு
- நிர்வாகப் பிரிவு
- நூலகம்
- உள்ளக கணக்காய்வுப் பிரிவு





## 02. ஆம் அத்தியாயம் – முன்னேற்றமும் எதிர்கால நோக்கும்

### 2.1. 2025 ஆம் ஆண்டில் திணைக்களத்தின் முன்னேற்றம்

2025 ஆம் ஆண்டில் செலவினத்தலைப்பு 236 இன் கீழ் அரசகரும மொழிகள் திணைக்களத்தின் நிதி முன்னேற்றமும் பௌதீக முன்னேற்றமும் வருமாறு.

- 2025.12.31 **ஆம் திகதிக்கு ஒட்டுமொத்த நிதி முன்னேற்றம்**

| விபரம் | 2025 ஆம் வருடத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு (ரூ.மி) | 2025.12.31 ஆம் திகதிக்கு உண்மையான செலவினங்கள் | 2025.12.31 ஆம் திகதிக்கு நிதி முன்னேற்றம் (%) |
|---|---|---|---|
| மீண்டெழும் செலவினங்கள் | 211.00 | 164.17 | 77.81% |
| மூலதனச் செலவினங்கள் | 13.00 | 10.74 | 82.65% |
| **மொத்தம்** | 224.00 | 174.92 | 78.09% |

**செலவினத்தலைப்பு 1703 இன் கீழ் அரசகரும மொழிக் கொள்கை நடைமுறைபடுத்துவதற்கான நிதி முன்னேற்றமும் பௌதீக முன்னேற்றமும் வருமாறு.**

| முன்னுரிமையளிக்கப்பட்ட துறை | நிதி ஒதுக்கீடு(மி.ரூ) | 2025.12.31 ஆம் திகதிக்கு உண்மையான செலவினங்கள் | ஆம் 2025.12.31 திகதிக்கு பௌதீக முன்னேற்றம் (%) |
|---|---|---|---|
| 1) அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ மொழிபெயர்ப்பாளர் என்ற வகையில் வினைத்திறன்மிக்க மொழிபெயர்ப்புச் சேவை வழங்கப்படுவதை உறுதி செய்தல். | 2.75 | 1.89 | 91% |
| 2) கலைச்சொற்களைத் தொகுப்பதில் உத்தியோகபூர்வ பொறுப்பாளர் என்ற வகையில் இருமொழி / மும்மொழி கலைச்சொற்றொகுதிகளை தொகுத்தல் | 0.6 | 0.38 | 80% |
| 3) சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளில் தமக்கு விருப்பமான மொழியில் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு பொதுமக்களுக்கு உள்ள உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்கில் அரச ஊழியர்களின் மொழித் தேர்ச்சியை மேம்படுத்துதல் | 41.26 | 32.12 | 80% |
| 4) தேசிய மொழி மேம்பாடு, கற்றல் மற்றும் பயன்பாட்டிற்காக நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி வசதிகளை வழங்குதல். | 5.39 | 1.98 | 85% |
| **மொத்தம்** | **50.00** | **36.37** | **80%** |

## (1) மொழிபெயர்ப்புப் பிரிவு

அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ மொழிபெயர்ப்பாளர் என்ற வகையில் இருமொழி மற்றும் மும்மொழிகளில் பணிபுரியும் போது மொழிபெயர்ப்பு சேவைகளின் அவசியத்தை உணர்ந்து, கோரிக்கை முன்வைக்கும் நிறுவனங்களுக்கு மொழிபெயர்ப்பு சேவையை வழங்குவது நிறுவனத்தின் முக்கிய பணிகளில் ஒன்றாகும்.

அதன்படி, 2025 ஆம் வருடத்தில் மொழிபெயர்ப்புச் செய்வதற்கு இலக்கு வைக்கப்பட்ட பக்கங்களின் எண்ணிக்கை 3000 ஆகும். இருப்பினும், 2025 ஆம் வருட முடிவில் 3043 பக்கங்களை மொழிபெயர்ப்புச் செய்து செவ்வைப் பார்க்க முடிந்தது. அதன்படி பிரதானமாக மொழிபெயர்ப்புச் செய்வதற்கும் செவ்வைப் பார்ப்பதற்கும் பின்வரும் நிறுவனங்களிலிருந்து ஆவணங்கள் கிடைக்கப்பெற்றிருந்தன:

I. குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் விசாரணைக் கோப்புகள்
II. பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவின் விசாரணைக் கோப்புகள்
III. இலங்கைப் பொலிஸ், இலங்கை கடற்படை, இலங்கை இராணுவம் ஆகிய நிறுவனங்களின் ஆவணங்கள்
IV. ஊவா மாகாண ஆளுநர் அலுவலகத்திலிருந்து கிடைக்கப்பெற்ற ஆவணங்கள்
V. தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையிடமிருந்து கிடைக்கப்பெற்ற ஆவணங்கள்
VI. பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிலிருந்து கிடைக்கப்பெற்ற ஆவணங்கள்
VII. அரசகரும மொழிகள் ஆணைக்குழுவினால் அனுப்பப்பட்ட ஆவணங்கள்

அரச மற்றும் பகுதியளவிலான அரச நிறுவனங்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற மொழிபெயர்ப்புக் கோரிக்கைகள் பின்வருமாறு.

| மொழிபெயர்ப்பு கோரிக்கைகள் | சிங்களம்/ தமிழ் | சிங்களம் / ஆங்கிலம் | ஆங்கிலம்/ தமிழ் | மொத்தம் |
|---|---|---|---|---|
| மொழிபெயர்ப்புக்காகப் பெறப்பட்ட மொத்தப் பக்கங்களின் எண்ணிக்கை | 1,660 | 1,365 | 123 | 3,148 |
| செவ்வைப் பார்த்து உறுதி செய்யும் பொருட்டு கிடைக்கப்பெற்ற பக்கங்களின் மொத்த எண்ணிக்கை | 161 | 344 | 64 | 569 |
| மொழிபெயர்க்கப்பட்ட ஆவணங்களின் எண்ணிக்கை (பக்கங்கள்) | 1,539 | 823 | 71 | 2,433 |
| செவ்வைப் பார்க்கப்பட்ட ஆவணங்களின் எண்ணிக்கை (பக்கங்கள்) | 145 | 363 | 102 | 610 |

மேலும், 2025 ஆம் வருடத்தில் பகுதியளவிலான அரச நிறுவனங்களின் மொழிபெயர்ப்பு பணிகளை மேற்கொண்டதன் மூலம் ரூ. 177,934.50 நிதி வருமானத்தை அரச வருமானத்துடன் சேர்க்க முடிந்துள்ளது.

**மொழிபெயர்ப்புத் துறையின் வளர்ச்சிக்காக 2025 ஆம் வருடத்தில் முன்னெடுக்கப்பட்ட பிற பணிகள்**

**மொழிபெயர்ப்புத் துறையில் சிறப்புப் பட்டப்படிப்பைத் தொடரும் பல்கலைக்கழக மாணவர்களுக்காக நடைமுறைப் பயிற்சிகளை வழங்குதல்**

இதன்போது மொழியைக் கையாளும் திறனையும், அதேபொன்று தொழிற்றுறை சார்ந்த சந்தர்ப்பங்கள் மற்றும் சர்வதேச தொடர்புகள் மூலம் தமது அறிவு மற்றும் திறமைகளைப் பயன்படுத்தி பல்வேறு சந்தர்ப்பங்களை அடைவதற்குத் தேவையான நடைமுறை பயிற்சிகளும், வழிகாட்டல்களும் வழங்கப்படுகின்றன. அதற்கமைய பின்வருமாறு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

| பல்கலைக்கழகம் | மாணவர்களின் எண்ணிக்கை | காலப் பகுதி | மொழி மூலம் |
|---|---|---|---|
| களனிப் பல்கலைக்கழகம் | 34 | 90 மணித்தியாலங்கள் | (சிங்களம்/ ஆங்கிலம்) |
| தென்கிழக்குப் பல்கலைக்கழகம் | 20 | 100 மணித்தியாலங்கள் | (தமிழ்/ஆங்கிலம் /அரபு) |
| யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் | 15 | 03 மாதங்கள் | (தமிழ்/ஆங்கிலம்/ சிங்களம்) |
| கிழக்குப் பல்கலைக்கழகம் | 15 | 02 மாதங்கள் | (தமிழ் / ஆங்கிலம்) |
| சபிரகமுவா பல்கலைக்கழகம் | 05 | 06 மாதங்கள் | (சிங்களம்/ ஆங்கிலம்) |
| கிழக்குப் பல்கலைக்கழகம் | 05 | 02 மாதங்கள் | (தமிழ் / ஆங்கிலம்) |

இதற்கமைய, 94 பல்கலைக்கழக மாணவர்கள் திணைக்களத்தில் வெற்றிகரமாக பயிற்சிபெற்று வெளியேறிச் சென்றுள்ளனர்.

- **மொழிபெயர்ப்புத் துறை சம்பந்தமாக பல்கலைக்கழக மாணவர்களைத் தெளிவூட்டும் நிகழ்ச்சிகளை நடாத்துதல்.**

இதன்போது பல்கலைக்கழகங்களினால் முன்வைக்கப்படுகின்ற கோரிக்கைகளுக்கு அமைய, திணைக்கள வளவாளர்கள் சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகங்களுக்கு நேரடியாகச் சென்று, மொழிபெயர்ப்புத் துறையின் நடைமுறைப் பயன்பாடு தொடர்பில் தெளிவூட்டும் நிகழ்ச்சிகளை நடாத்தி வருகின்றனர். அதற்கமைய 2025 ஆம் வருடத்தில்,

- களனிப் பல்கலைக்கழக மாணவர்களை தெளிவூட்டும் நிகழ்ச்சி ஆகஸ்ட் மாதம் 19 ஆம் திகதியும், (பங்குபற்றிய பல்கலைக்கழக மாணவர்களின் எண்ணிக்கை: 82)
- யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களை தெளிவூட்டும் நிகழ்ச்சி அக்டோபர் மாதம் 24 ஆம் திகதியும், (பங்குபற்றிய பல்கலைக்கழக மாணவர்களின் எண்ணிக்கை: 25)
  சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகங்களில் நடாத்தப்பட்டன.

**(04) www.bhashawa.lk இணையதளத்தினூடாக மொழிபெயர்ப்பு வசதிகளை வழங்குபவர்களின் குழாத்தை இற்றைப்படுத்தல்.**

மொழிபெயர்ப்புப் பணிகளை மென்மேலும் வினைத்திறன்மிக்கதாக மேற்கொள்ளும் நோக்கில் மொழிபெயர்ப்பு வசதிகளை வழங்கும் உத்தியோகத்தர்களின் உதவி பெற்றுக்கொள்ளப்படுகின்றது. இவ்விணையதளத்தில் பதிவு செய்வதற்காக வருட ஆரம்பத்தில் www.bhashawa.lk இணையதளத்தினூடாக விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படுவதுடன் வருடந்தோறும் நான்காவது காலாண்டில் இப்பரீட்சை கொழும்பில் நடாத்தப்படுகின்றது. அதற்கமைய 2025 அக்டோபர் மாதம் 28 ஆம் திகதி, இப்பரீட்சை நடாத்தப்பட்டதுடன் 49 விண்ணப்பதாரிகள் பரீட்சைக்குத் தோற்றினர். அதற்கமைய இப்பரீட்சையில் சித்தியடைந்த 11 விண்ணப்பதாரிகள் புதிதாக மொழிபெயர்ப்பு வசதிகளை வழங்கும் உத்தியோகத்தர்களாக குழாத்துடன் இணைத்துக்கொள்ளப்பட்டனர்.

(05) **மொழிபெயர்ப்பு உத்தியோகத்தர்களுக்காக பயிற்சி நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்தல்**.

இற்றைப்படுத்தப்பட்ட அறிவுடன் கூடிய சிறந்த மொழிபெயர்ப்புச் சேவையொன்றை நிறுவும் நோக்கில் திணைக்கள பதவியணியைச் சேர்ந்த மொழிபெயர்ப்பு உத்தியோகத்தர்களுக்கு பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இதற்கமைய சட்ட ஆவணங்களின் மொழிபெயர்ப்பு, மரபுத்தொடர்களின் பயன்பாடு மற்றும் Technology and Software for Translations முதலான துறைகளில் பயிற்சிகள் அளிக்கப்பட்டன. மொழிபெயர்ப்பிற்கான தொழில்நுட்பம் மற்றும் பாடங்கள் பற்றி விழிப்புணர்வு பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.

(06) **அரச நிறுவனங்களில் பெரும்பாலும் பயன்படுத்தப்படுகின்ற படிவங்களை இருமொழிகளில் தயாரித்தல்**

பொதுமக்களுக்கு மிக எளிதாக தமது தாய்மொழியில் அல்லது பிற மொழியில் படிவங்களை பூர்த்தி செய்வதற்கு ஏதுவாக படிவங்கள் மும்மொழிகளில் தயாரிக்கப்பட்டன. மிகச் சரியான மொழிபெயர்ப்பு, படிவத்திற்கு ஏற்ற தெளிவான அமைப்பு, இரு மொழிகளிலும் ஒரே பொருள் நிலைபேறாக இருக்கும் வகையில் சொற்களின் பயன்பாடு என்பன மீது இங்கு கவனம் செலுத்தப்பட்டன. அதற்கமைய பின்வரும் நிறுவனங்களிலிருந்து கிடைக்கப்பெற்ற படிவங்கள் இருமொழிகளில் தயாரிக்கப்பட்டன:

- ❖ பலப்பிட்டி, திம்பிரிகஸ்யாய மற்றும் காலி பிரதேச செயலகங்களிலிருந்து கிடைக்கப்பெற்ற படிவங்கள் - 52
- ❖ நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சிடமிருந்து கிடைக்கப்பெற்ற படிவங்கள் - 22
- ❖ மெததும்பரை பிரதேச செயலகத்திலிருந்து கிடைக்கப்பெற்ற படிவங்கள் - 10
- ❖ வரக்காப்பொலை பிரதேச சபையிடமிருந்து கிடைக்கப்பெற்ற படிவங்கள் 30, என்றவாறு இவ்வருடத்தில் மேற்படி நிறுவனங்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற 114 படிவங்கள் இருமொழிகளில் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டன.



## (2) கலைச்சொற்றொகுதிப் பிரிவு

1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்கச் சட்டத்தினூடாக அரசகரும மொழிகள் சட்டம் அமுலுக்கு வந்ததைத் தொடர்ந்து அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ மொழிபெயர்ப்பாளர் என்ற வகையிலும், கலைச்சொற்றொகுதிகளைத் தொகுக்கும் பொறுப்பு அரசகரும மொழிகள் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, நிறுவப்பட்ட கலைச்சொற்றொகுதிப் பிரிவின் மூலம் பல்வேறு துறைகளையும் சார்ந்த சொற்றொகுதிகளை தேசிய மொழிகளில் புரிந்துகொள்வதற்கு ஏதுவான முறையில் மும்மொழி/ இருமொழி கலைச்சொற்றொகுதிகளை தொகுக்கும் பணி இடம்பெறுகின்றது.

புதிய துறைகள் சார்ந்ததாக மும்மொழி கலைச்சொற்றொகுதிகளை தொகுத்தல், பழைய கலைச்சொற்றொகுதிகளை இற்றைப்படுத்தி இணையத்தளத்திற்கு பதிவேற்றல், பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் ஏனைய கல்வி நிறுவனங்களில் கற்கை நடவடிக்கைகளின்போது உபயோகிக்கும் புதிய சொற்களுக்கு கலைச்சொற்களைத் தொகுத்தல், அரச மற்றும் பிற நிறுவனங்களினால் முன்வைக்கப்படுகின்ற கோரிக்கைகளுக்கு அமைய புதிய சொற்களைத் தொகுப்பதற்கு உதவுதல், மொழிபெயர்ப்புப் பணிகளின்போது தேவைப்படுகின்ற புதிய சொற்களைத் தொகுத்தல், அதேபோன்று எல்லா அரச நிறுவனங்களுக்கும் அவற்றுடன் இணைந்த நிறுவனங்களுக்கும் பெயரிடுதல்களை வழங்குவதற்கு உதவுதல் ஆகியன இதன் கீழ் இடம்பெறும் பணிகள் ஆகும்.

1956 ஆம் வருடம் தொடக்கம் இருமொழிகளில் தயாரிக்கப்பட்ட கலைச்சொற்றொகுதிகளை மும்மொழிக் கலைச்சொற்றொகுதிகளாக தொகுக்கும் பணிகள் 2013 ஆம் வருடத்தில் ஆரம்பிக்கப்பட்டதுடன் தற்சமயம் பல்வேறு துறைகளைச் சார்ந்ததாக 92 கலைச்சொற்றொகுதிகள் தொகுக்கப்பட்டுள்ளன.




கலைச்சொற்றொகுதி இணையத்தளப் பக்கம் **Termino Hub** எனும் பெயரில் புது வடிவில் அறிமுகம் செய்யப்பட்டிருப்பதுடன் ஆப்பிள் மற்றும் ஆண்ட்ராய்ட் (Apple & Android) முறைமைகளின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட கலைச்சொற்றொகுதிகளை உள்ளடக்கிய கையடக்கத் தொலைபேசி செயலி Termino Hub வலைத்தளத்தளத்தினூடாக பயன்படுத்தலாம்.



2025 ஆம் வருடத்தில் புதிய கலைச்சொற்றொகுதிகளை தொகுத்தல்

- காப்பக அறிவியல் தொடர்பான மும்மொழி கலைச்சொற்றொகுதி மற்றும்
- அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான மும்மொழி கலைச்சொற்றொகுதிகளை தொகுக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

காப்பக அறிவியல் தொடர்பான மும்மொழி கலைச்சொற்றொகுதி தேசிய சுவடிக்கூடத் திணைக்களத்தின் உதவியுடனும் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான மும்மொழி கலைச்சொற்றொகுதி பாதுகாப்பு அமைச்சின் அனர்த்த முகாமைத்துவப் பிரிவினதும், அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினதும் உதவியுடனும் தொகுக்கப்பட்டன. இவ்விரு கலைச்சொற்றொகுதிக்களுக்கும் சிங்கள மற்றும் ஆங்கில மொழிகளில் சொற்கள் சேகரிக்கப்பட்டதுடன், தொகுப்புப் பணிகள் நிறைவு செய்யப்பட்டு 2026 ஆம் வருடத்தின் முதல் காலாண்டில் 'Termino-Hub' இணையத்தள பக்கத்தினூடாக இணையத்தளத்தில் வெளியிடப்பட்டதன் மூலம், பயனாளிகள் பயன்பெறுவதற்கான வசதிகள் செய்யப்பட்டன. "





## (3) மொழி ஆய்வுகூடம்

அரசகரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்தும் பிரதான நோக்கம் ஒன்றாக விளங்குவது மொழியாற்றலுடன் கூடிய சமூகமொன்றை கட்டியெழுப்புவதாகும். "பொதுமக்களுக்கு தாம் விரும்பும் மொழியில் சேவைகளை வழங்குவதை உறுதிப்படுத்தும் நோக்கில், அரச மற்றும் பகுதியளவிலான அரச உத்தியோகத்தர்களுக்காக மொழிப் பாடநெறிகளை நடாத்துதல் இத்திணைக்களத்தின் விடையப் பரப்பினுள் வருகின்ற விசேட அம்சமாகும். 18/2020 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கைக்கும், 1/2023 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கைக்கும் அமைய அரச ஊழியர்களின் மொழித் திறனை விருத்தி செய்வதற்கும், மொழியாற்றலுடன் கூடிய சமூகமொன்றை கட்டியெழுப்புவதற்கும் தேவையான பின்னணியை அமைக்கும் நடவடிக்கைகளும் வசதிகளை வழங்கும் நடவடிக்கைகளும் மொழி ஆய்வுகூடத்தினால் முன்னெடுக்கப்படுகின்றது.

(1) 18/2020 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கைக்கு அமைய மொழி ஆய்வுகூடத்தினால் 2025.01.01 திகதி முதல் 2025.12.31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் தீவு முழுவதும் உட்படுமாறு 624 சிங்கள மற்றும் தமிழ் மொழிப் பாடநெறிகள் ஆரம்பிக்கப்பட்டன. அதேபோன்று 2025 ஆம் வருடத்தில் இம்மொழிப் பாடநெறிகளைப் பூர்த்தி செய்த 43594 உத்தியோகத்தர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

**2025.01.01** ஆம் திகதி முதல் **2025.12.31** ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட 100, 150 மற்றும் 200 மணித்தியால சிங்கள, தமிழ் மொழிப் பாடநெறிகள் சம்பந்தமான தரவுகள் மாதாந்த அடிப்படையில் வருமாறு.




| | ஜனவரி | பெப்ரவரி | மார்ச் | ஏப்பிரல் | மே | ஜூன் | ஜூலை | ஓகஸ்ட் | செப்டெம்பர் | ஒக்டோபர் | நவம்பர் | டிசெம்பர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 100 மணி | 14 | 55 | 38 | 25 | 27 | 34 | 40 | 34 | 45 | 24 | 19 | 4 |
| 150 மணி | 21 | 29 | 26 | 13 | 23 | 23 | 26 | 24 | 17 | 21 | 8 | 2 |
| 200 மணி | 1 | 3 | 0 | 3 | 6 | 4 | 2 | 2 | 5 | 0 | 4 | 2 |

2025 ஆம் வருடத்தில் மாகாண மட்டத்தில் சிங்களம், தமிழ் மொழிப் பாடநெறிகளை ஆரம்பித்தல்.

இவ் வருடத்தில் நாடளாவிய ரீதியில் 502 தமிழ் மொழிப் பாடநெறிகள் ஆரம்பிக்கப்பட்டன. அவற்றின் விபரங்கள் மாகாண மட்டத்தில் வருமாறு.




"**மேலும்,** 2025 **ஆம் ஆண்டில் நாடளாவிய ரீதியில் 122 சிங்கள மொழிப் பாடநெறிகள் ஆரம்பிக்கப்பட்டன.**



01/2023 **ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் மொழிப் பாடநெறிகள் நடாத்துதல்.**

**பகுதியளவிலான அரச நிறுவனங்களில் பணியாற்றும் உத்தியோகத்தர்களின் கோரிக்கைக்கு அமைய, நாடளாவிய ரீதியில் 31 தமிழ் மொழிப் பாடநெறிகள் ஆரம்பிக்கப்பட்டன.**




**(3) மொழிப் பாடநெறிகள் சார்பில் மொழிப் போதனாசிரியர்கள் குழாத்தை இற்றைப்படுத்தலும் மொழிப் போதனாசிரியர்களுக்குப் பயிற்சி அளித்தலும்**

ஒவ்வொரு வருடமும் மொழி போதனாசிரியர்கள்களின் குழாம் இற்றைப்படுத்தப்படுகிறது. அத்துடன் இக்குழாத்தில் பதிவுசெய்து கொண்டுள்ள மொழிப் போதனாசிரியர்களுக்கு பயிற்சிகள் அளிப்படுவதுடன் இப்பயிற்சிகளின் போது புதிய கற்பித்தல் முறைகளை அறிமுகஞ்செய்தல், கற்பித்தல் முறைகள் தொடர்பாக நடைமுறை பரீட்சித்தல்களுக்கு உட்படுத்துதல், குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்துதல் முதலான செயற்பாடுகளினூடாக தெளிவூட்டல்கள் இடம்பெறுகின்றன. பொதுமக்களுக்கு தாம் விரும்பும் மொழியில் சேவைகளை பெறுவதை உறுதிப்படுத்துதல், பாடநெறி பயிலுனர்களுக்கு தமது சகோதர இன மக்களுடன் ஒற்றுமையாகவும் சமாதானமாகவும் இணைந்து செயலாற்றுவதற்கு தேவையான அறிவு, மனப்பாங்கு மற்றும் திறன்களை விருத்தி செய்தல் இதன் பிரதான நோக்கங்களாகும்.

❖ மொழிப் போதனாசிரியர்களை தெளிவூட்டும் முதலாவது பயிற்சி நிகழ்ச்சி ஆகஸ்ட் 27 மற்றும் 28 ஆம் திகதிகளில் ஊவா முகாமைத்துவ அபிவிருத்தி நிலையத்தில் 128 போதனாசிரியர்களுக்காக நடாத்தப்பட்டது.

❖ இதன் இரண்டாவது பயிற்சி நிகழ்ச்சி ஒக்டோபர் மாதம் 16 மற்றும் 17 ஆம் திகதிகளில் அரசகரும மொழிகள் திணைக்களத்தில் 48 புதிய போதனாசிரியர்களுக்காக நடாத்தப்பட்டது.

❖ இதன் மூன்றாவது பயிற்சி நிகழ்ச்சி நவம்பர் மாதம் 19 மற்றும் 20 ஆம் திகதிகளில் பொல்கொல்ல கூட்டுறவு அபிவிருத்தி நிலையத்தில் 132 போதனாசிரியர்களுக்காக நடாத்தப்பட்டது

இவ்வருடத்தில் மேற்படி பயிற்சி நிகழ்ச்சிகளில் 308 மொழிப் போதனாசிரியர்களுடன் மாவட்ட மொழி மேம்பாட்டு உதவி உத்தியோகத்தர்களும், மொழி உத்தியோகத்தர்களும் திணைக்களத்தின் மாவட்ட ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்களும் பங்குபற்றினர்.

(04) **சமய சகவாழ்வுக்காக மொழிப் பயன்பாட்டு நிகழ்ச்சிகளை நடாத்துதல்**

சமய சகவாழ்வை நோக்காகக்கொண்டு 2025 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட புதிய செயற்பாடொன்றாகும். இதன்போது சமய தலைவர்களுக்காகவும், மொழிக் கற்கைகளில் ஈடுபடுபவர்களுக்காகவும் மொழிப் பயிற்சி நிகழ்ச்சிகள் முன்னெடுக்கப்ட்டன. அதற்கமைய இவ்வருடத்தில் பின்வருமாறு 5 பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.

❖ பேருவளை நலீமியா உயர் கல்வி நிறுவனத்தின் 43 பல்கலைக்கழக மாணவர்களுக்காக விசேட சிங்கள மொழிப் பாடநெறியொன்றை ஆரம்பித்தல்.

❖ யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்துடன் இணைந்து இந்துமத குருக்கள் மற்றும் கிறிஸ்தவ மதத் தலைவர்கள் என்றவாறு 40 சமயத் தலைவர்கள் சார்பில் விசேட சிங்கள மொழிப் பாடநெறியொன்றை ஆரம்பித்தல்.

❖ அஸ்கிரிய மகா விகாரை மகா பிரிவெனாவின் 40 பிக்குகள் சார்பில் விசேட தமிழ் மொழிப் பாடநெறியொன்றை ஆரம்பித்தல்.

❖ அம்பாறை, பொத்துவில் முகுந்து மகா விகாரையின் 30 பிக்குகள் சார்பில் தமிழ் மொழிப் பாடநெறியொன்றை ஆரம்பித்தல்.

❖ அக்கரைப்பற்று அபூபக்கர் சித்தீக் கல்வி நிறுவனத்தை மையமாகக் கொண்டு 40 மௌலவிமார்களுக்காக சிங்கள மொழி கற்பித்தல் பாடநெறியொன்றை ஆரம்பித்தல்





**"சிங்களம் மற்றும் தமிழ் மொழிப் பாடநெறிகளில் கல்வி பயிலும் மௌலவிமார்கள் மற்றும் பிக்குமார்க"**





**"அக்கரைப்பற்று அபூபக்கர் சித்தீக் கல்வி நிறுவனத்தில் மௌலவிமார்கள் பாடநெறிகளில் பங்குபற்றுதல் மற்றும் ஜாமியா நலீமியா நிறுவனத்தின் மாணவர்கள் பாடநெறியை நிறைவு செய்து சான்றிதழ்களைப் பெற்று விடைபெறும் நிகழ்வுகள்"**

**(05) வெளியாரி நிறுவனங்களின் கோரிக்கைகளுக்கமைய மொழிப் பாடநெறிகளை நடாத்துதல்**

அரசகரும மொழிகள் திணைக்களம், அரச மற்றும் பகுதியளவிலான அரச நிறுவனங்களினால் முன்வைக்கப்படுகின்ற கோரிக்கைகளுக்கு அமைய மொழிப் பாடநெறிகளை நடாத்துவதற்குத் தேவையான வளவாளர்களைப் பெற்றுக்கொடுத்து வசதிகளை வழங்கும் அதேவேளை ஒருங்கிணைப்புப் பணிகளையும் முன்னெடுக்கின்றது. அதற்கமைய 2025 ஆம் வருடத்தில்

- ❖ சிறைச்சாலைகளில் உள்ள கைதிகளை மொழித் தேர்ச்சி பெற்றவர்களாக சமூகமயப்படுத்தும் நோக்கில், வெலிக்கடை சிறைச்சாலையில் உள்ள ஆண் மற்றும் பெண் கைதிகளுக்காக இரண்டு 150 மணித்தியால ஆங்கில மொழிப் பாடநெறிகள் ஆரம்பிக்கப்பட்டன.
- ❖ இலங்கை விசேட அதிரடிப்படையின் கட்டுக்குருந்த முகாமைச் சேர்ந்த 120 உத்தியோகத்தர்களுக்காக ஆங்கில மொழிப் பாடநெறியொன்று நடாத்தப்பட்டது.
- ❖ பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக சிங்களம் மற்றும் தமிழ் மொழிப் பாடநெறிகள் 2025.11.18 அன்று ஆரம்பிக்கப்பட்டு 2026 ஆம் வருடம் வரை தொடர்ந்தும் நடாத்தப்பட்டு வருகின்றன.
- ❖ அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த 25 உத்தியோகத்தர்களுக்காக ஆங்கில மொழிப் பாடநெறியொன்று 2025.12.02 அன்று ஆரம்பிக்கப்பட்டது.



பொல்கொல்லை தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்தில் மொழிப் போதனாசிரியர்களை பயிற்சி பெறுதல்



பொல்கொல்லை தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்தில் நடைபெற்ற பயிற்சி நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மொழிப் போதனாசிரியர்கள் சிலர்.

## (4) பரீட்சைப் பிரிவு

அரசகரும மொழிக் கொள்கையை அமுல்படுத்தும் மற்றுமொரு பிரிவாக அரச ஊழியர்களின் மொழித் தேர்ச்சியை மதிப்பீடு செய்வதற்குத் தேவையான வசதிகளை வழங்கும் முக்கிய பிரிவாக பரீட்சைகள் பிரிவு செயற்படுகின்றது. அரச உத்தியோகத்தர்களின் மொழித் தேர்ச்சியை மதிப்பீடு செய்வதற்கான எழுத்துப் பரீட்சைகளை நடாத்துதல், வாய்மூலப் பரீட்சைகளை நடாத்துதல், பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுதலும், சான்றிதழ்களை வழங்குதலும், வெளி நிறுவனங்களினால் முன்வைக்கப்படுகின்ற கோரிக்கைகளுக்கு அமைவாக ஆட்சேர்ப்புப் பரீட்சைகளை நடாத்துதல், வினைத்திறன்காண் தடைப் பரீட்சைகளை நடாத்துதல், மேற்படி பரீட்சைகளுக்குரிய வினாப்பத்திரங்களைத் தயாரித்தல் மற்றும் விடைத்தாள்களை மதிப்பீடு செய்தல் முதலான பணிகள் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

2025 ஆம் வருடத்தில் பரீட்சைப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்ட பிரதான பணிகள் வருமாறு.

(1) **தேசிய மொழித் தகைமை மதிப்பீட்டுப் பரீட்சையை (NLQ) நடாத்துதல்.**

18/2020 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் அறிமுகப்படுத்தப்பட்ட தேசிய மொழித் தகைமை மதிப்பீட்டுப் பரீட்சையை (NLQ), கிடைக்கப்பெறுகின்ற விண்ணப்பங்களை அடிப்படையாகக்கொண்டு ஒவ்வொரு வருடமும் அதிகபட்சமாக 04 தடவைகள் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கமைய 2024.10.01 முதல் 2025.08.15 வரையிலான காலப்பகுதிக்குள் இப் பரீட்சைக்கு விண்ணப்பித்த விண்ணப்பதாரர்களுல் 39 விண்ணப்பதாரர்களுக்காக சிங்கள மொழிப் பரீட்சையும், 21 விண்ணப்பதாரர்களுக்காக தமிழ் மொழிப் பரீட்சையும் என்றவாறு 02 பரீட்சைகள் நவம்பர் மாதம் 04ஆம் திகதி திணைக்களத்தில் நடத்தப்பட்டன. இதன்போது எழுத்து, பேச்சு, கேட்டல், வாசிப்பு ஆகிய 4 ஆக்கக்கூறுகளின் கீழ் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டதுடன் இதற்காக தனித்தனியாக நடாத்தப்படுகின்ற எழுத்துத் திறன் மதிப்பீட்டுப் பரீட்சை, பேச்சுத் திறன் மதிப்பீட்டுப் பரீட்சை, கேட்டல் திறன் மதிப்பீட்டுப் பரீட்சை மற்றும் வாசிப்புத் திறன் மதிப்பீட்டுப் பரீட்சை ஆகிய நான்கு பரீட்சைகளிலும் சித்தியெய்தும் உத்தியோகத்தர்களுக்கு, அவர்கள் பெற்றுக்கொள்ளும் புள்ளி மட்டங்களுக்கு அமைய ஒரு தடவை மட்டும் செலுத்தப்படுகின்ற ரூ. 15,000.00, ரூ. 20,000.00, ரூ. 25,000.00 என வழங்கப்படும் கொடுப்பனவுடன் சம்பள ஏற்றத்திற்குச் சமமான தொகையை ஊக்குவிப்புக் கொடுப்பனவாகவும் பெற்றுக்கொள்வதற்கு முடியும்.

(2) **தேசிய மொழித் தகைமை மதிப்பீட்டுப் பரீட்சைப் (NLQ) பற்றி அரச உத்தியோகத்தர்களுக்கு விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சிகளை நடாத்துதல்.**

தேசிய மொழித் தகைமை மதிப்பீட்டுப் பரீட்சை தொடர்பாக மாவட்ட மட்டத்தில் பொதுமக்கள், அரச / மாகாண அரச மற்றும் பகுதியளவிலான அரச உத்தியோகத்தர்களை விழிப்புணர்வூட்டும் 07 நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன. அவை பற்றிய விபரங்கள் வருமாறு

| தொ.இல. | திகதி | இடம் | பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | 2025 மார்ச் 27 | ஊவா மாகாணத்திற்கான விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சி பதுளை மாவட்டத்தில் | 150 |
| 02 | மார்ச் 28 | மத்திய மாகாணத்திற்கான விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சி கண்டி மாவட்டத்தில் | 469 |
| 03 | மே 30 | தென் மாகாணத்திற்கான விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சி மாத்தறை மாவட்டத்தில் | 340 |
| 04 | ஜூலை 02 | வடக்கு மாகாணத்திற்கான விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சி வவுனியா மாவட்டத்தில் | 180 |
| | ஆகஸ்ட் 01 | வடமேல் மாகாணத்திற்கான விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சி குருநாகல் மாவட்டத்தில் | 292 |

| | | | |
|---|---|---|---|
| 06 | செப்ட ம்பர் 04 | அரச மொழிக் கொள்கையுடன் தொடர்புடைய மொழிச் சுற்றறிக்கைகள் குறித்து சிறப்பு விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சி தென் மாகாணத்தின் அனைத்து கல்வி வலயங்களின் தலைவர்கள் மற்றும் விடயப் பொறுப்பதிகாரிகளுக்காக தென் மாகாண கல்வி அமைச்சில் | 85 |
| 07 | செப்ட ம்பர் 11 | வடமத்திய மாகாணத்திற்கான விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சி அனுராதபுர மாவட்டத்தில் | 286 |

(3) **அரச மற்றும் பகுதியளவிலான அரச நிறுவனங்களினால் முன்வைக்கப்படுகின்ற கோரிக்கைகளுக்கு அமைய பரீட்சைகளை நடாத்துதல், வினாத்தாள்களைத் தயாரித்தல் மற்றும் விடைத்தாள்களை மதிப்பீடு செய்தல்.**

மொழித் தேர்ச்சி மதிப்பீட்டாளர் என்ற வகையில் அரசகரும மொழித் திணைக்களத்தின் தேவைகளின் அடிப்படையிலும், பிற பல்வேறு அரச மற்றும் பகுதியளவிலான அரச நிறுவனங்களினால் முன்வைக்கப்படுகின்ற கோரிக்கைகளுக்கு அமையவும் பரீட்சைகள் நடாத்துதல், விணாப்பத்திரங்களைத் தயாரித்தல் மற்றும் விடைத்தாள்களை மதிப்பீடு செய்தல் முதலான பிரதான பணிகள் பிரிவினால் முன்னெடுக்கப்படுகின்றன. அதற்கமைய 2025 ஆம் வருடத்தில் பின்வரும் பணிகள் நிறைவேற்றப்பட்டன:

- திணைக்களத்தின் மொழிப் போதனாசிரியர் குழாத்தை இற்றைப்படுத்துவதற்குரிய எழுத்து மூலப் பரீட்சையை மே மாதம் 20ஆம் திகதியும், கற்பித்தல் திறன்களை பரிசோதிக்கும் பரீட்சை, பேச்சுத் திறன் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை ஆகஸ்ட் 21 ஆம் திகதியும் நடாத்தப்பட்டன.
- மொழி ஆய்வுகூடத்தின் ஆங்கில மொழிப் பாடநெறிகளில் கற்பிப்பதற்காக ஆங்கில மொழிப் போதனாசிரியர்களை குழாத்தில் பதிவு செய்வதற்குரிய பரீட்சை செப்டெம்பர் 16 ஆம் திகதி நடாத்தப்பட்டது.
- தாய்மொழித் தேர்ச்சி தமிழ் பரீட்சை செப்டம்பர் 29 ஆம் திகதி நடாத்தப்பட்டது.
- அரசகரும மொழிகள் ஆணைக்குழுவிற்கு மொழி உத்தியோகத்தர்களையும், மொழி மேம்பாட்டு மற்றும் விசாரணை உத்தியோகத்தர்களையும் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான பரீட்சை அக்டோபர் 18 மற்றும் 19 ஆம் திகதிகளில் நடாத்தப்பட்டது.
- Bhashawa.lk இணையதளத்தினூடாக மூலம் மொழி வசதி வழங்குவோரின் குழாத்திற்கு இணைத்துக்கொள்வதற்கான பரீட்சை அக்டோபர் 28 ஆம் திகதி நடாத்தப்பட்டது.
- அரசகரும மொழிகள் திணைக்களத்திற்கு மொழிபெயர்ப்பாளர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான பரீட்சை நவம்பர் 27 ஆம் திகதி நடாத்தப்பட்டது.



மொழிப் போதனாசிரியர்களை இணைத்துக்கொள்வதுடன் தொடர்புடைய வாய்மூலப் பரீட்சைகளை நடாத்துதல்



தேசிய மொழித் தகைமை மதிப்பீட்டுப் பரீட்சை தொடர்பாக அரச உத்தியோகத்தர்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சி - குருநாகல் மாவட்டம்

## (5) **தேசிய மொழி மேம்பாடு, கற்றல் மற்றும் பயன்பாட்டிற்கான வசதிகளை ஏற்பாடு செய்யும் நிகழ்ச்சிகளைத் திட்டமிடல்**

01. ஒவ்வொரு மாதமும் மொழி, இலக்கியம், கலை மற்றும் ஒழுக்கநெறிகள் தொடர்பாக, துறை நிபுணர்களுடனான அறிவியல் கலந்துரையாடல்கள் இடம்பெறுகின்றன. இது **"சம்பாஷண (கலந்துரையாடல்)"** எனும் பெயரில் அழைக்கப்படுவதோடு, மொழி நிபுணர்கள், துறை நிபுணர்கள் மற்றும் மொழியில் ஆர்வமுடைய எவருக்கும் இந்நிகழ்ச்சியில் கலந்துகொள்ள முடியும். இதன் மூலம் மொழியின் வளர்ச்சிப்போக்கு சம்பந்தமான விரிவான கலந்துரையாடலொன்றை கட்டியெழுப்புவதற்கு வாய்ப்பு கிட்டியுள்ளது. அதற்கமைய 2025 ஆம் வருடத்தில் 10 நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டன. இந்நிகழ்ச்சிகளில் ஒவ்வொரு மாதமும் 120 இற்கு மேற்பட்டோர் கலந்து கொண்டதன் பேரிலும், காணப்பட்ட வரவேற்பு காரணமாகவும் 2026 ஆம் வருடத்திலும் பல்வேறு மொழி நிபுணர்களை இணைத்துக்கொண்டு இந் நிகழ்ச்சியை தொடர்ந்தும் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

| **திகதி** | **தலைப்பு** | **வளப்பங்களிப்பை வழங்கிய நிபுணர்களின் பெயர்கள்** |
|---|---|---|
| 2025.03.26 | "තොටිල්ල පදවන අත ලොව ආණ්ඩුකරයි ද?"<br>"**தொட்டிலை ஆட்டும் கை உலகை ஆளுமா**?" பெண்கள் மற்றும் சமூகத்தைப் பற்றிய இலக்கிய கலந்துரையாடல் | இலக்கியவாதி திருமதி தனுஷிகா கருணாரத்ன மற்றும் திருமதி தனுஜா அயகம |
| 2025.04.30 | සූර්ය මංගල උදානය<br>சிங்களம்-தமிழ் புத்தாண்டு கலாசார நிகழ்ச்சிகள் | திணைக்கள பதவியணியினர் |
| 2025.05.29 | "**பௌத்த இலக்கியத்தின் மூலம் ஊட்டம் பெற்ற பாடல் கலை**" பற்றிய ஆய்வுக் கண்ணோட்டம் | சிரேஷ்ட ஊடகவியலாளர் மற்றும் இசையமைப்பாளர் திரு. லால் ஆனந்த அபேதீர மற்றும் பாடகி திருமதி சந்த்யா புலத்சிங்கள |
| 2025.07.24 | "**மொழியின் அரசியல் குறித்த சமகால சிந்தனைகள்**" அறிஞர் கலந்துரையாடல் | கலாநிதி (திரு.) சுனில் விஜேசிறிவர்தன |
| 2025.06.26 | "**நவீன சிங்கள இலக்கியத்தில் காதல் மொழி**" அறிஞர் கலந்துரையாடல் | கலாநிதி (திரு.) கௌஷல்ய குமாரசிங்க |
| 2025.08.28 | දර්ශනයට ස්වාභාවික මව් භාෂාවක් තිබේද ?<br>"**மெய்யியலுக்கு இயற்கையான தாய்மொழி உண்டா**?" மாட்டின் ஹைடகர் மற்றும் நலின் த சில்வா ஊடான விமர்சனம் | திரு. வங்கீச சுமனசேகர |
| 2025.09.11 | "இலங்கைச் சிறுகதை இலக்கியத்தின் புதிய பரிமாணங்கள்" பற்றிய அறிவியல் கலந்துரையாடல் | நெறிப்படுத்தல் - திரு. சிசிர மெதகம; எழுத்தாளர் திரு. பிரபாத் ஜயசிங்க, எழுத்தாளர் திருமதி. விராஜினி தென்னகோன், எழுத்தாளர் திரு. ரங்கன ஆரியதாச |
| 2025.10.30 | "විරාගයේ භාෂා ලෝකය සහ මතවාද ගැන යළි විමසුමක්<br>""விராகய" சிங்களத் திரைப்படக் காட்சியுடன் கலந்துரையாடல். | இலக்கிய கலை விமர்சகர் திரு. விதர்ஷன கன்னங்கர |
| 2025.11.27 | "English Vinglish" திரைப்பட காட்சி மற்றும் கலந்துரையாடல் | திரு. பூபதி நலீன் |
| 2025.12.30 | "**இந்திய இசையைத் தழுவாத தனித்துவமான இலங்கை திரைப்பட இசையமைப்பில் புதிய திருப்புமுனைக்கு வழிவகுத்த இசையமைப்பாளர் சரத் தசநாயக்கவின் இசை மரபு**" பாடல் இரசனை நிகழ்ச்சி | அரசகரும மொழிகள் ஆணையாளர் ஷமிந்த மஹாலேக்கம் அவர்களுடன் திணைக்கள உத்தியோகத்தர்கள் |

**02. சிங்கள மொழித் தினக் கொண்டாட்டம்**

ஒவ்வொரு வருடமும் மார்ச் 02 ஆம் திகதி சிங்கள மொழித் தினம் கொண்டாடப்படுகிறது. சிங்கள மொழியின் வளர்ச்சிக்கு அளப்பரிய பங்காற்றிய குமாரதுங்க முனிதாச அவர்களின் ஞாபகார்த்த நாளை அடிப்படையாகக் கொண்டு, சிங்கள மொழி, இலக்கியம் மற்றும் கலாசார அடையாளத்தை பாதுகாத்தல், மேம்படுத்தல் மற்றும் அரசகரும மொழி என்ற வகையில் சிங்கள மொழியின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதை நோக்காகக் கொண்டு, பாடசாலை மாணவர்கள், அரச உத்தியோகத்தர்கள், பொதுமக்களுடன் இணைந்து பல்வேறு நிகழ்ச்சிளை உடையதாக இத்தினம் கொண்டாடப்படுகிறது.

2025 ஆம் வருடத்தில் சிங்கள மொழி தினக் கொண்டாட்டம், 2025 மார்ச் 04 ஆம் திகதி நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு கௌரவ அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷண நாணாயக்கார அவர்களின் தலைமையில் அரசகரும மொழிகள் திணைக்களத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சிங்கள மொழியின் வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் அளப்பரிய பங்காற்றி இவ்வுலகை விட்டுப் பிரிந்த மாபெரும் அறிஞர் குமாரதுங்க முனிதாச அவர்கள் உட்பட அனைவரையும் நினைவுகூருதல், சிங்கள மொழிக்கும் அதேபோல் அரசகரும மொழிகள் திணைக்களத்தின் முன்னேற்றத்திற்கும் அளப்பரிய சேவையாற்றிய வாழ்நாள் பேராசிரியர் ஜே.பீ. திசாநாயக்க அவர்களை கௌரவித்து பாராட்டுதல், அவர்களின் வாழ்க்கை வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட “ஜே.பி. பிரணாம” என்ற நூலை வெளியிடுதல், கலைசொற்றொகுதிகளை இணையதளத்தில் அறிமுகஞ்செய்தல், சிங்கள மொழி டிப்ளோமா பாடநெறியை பூர்த்தி செய்த தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் டிப்ளோமாதாரிகளுக்கு சான்றிதழ்கள் வழங்குதல் மற்றும் அரசகரும மொழிகள் திணைக்களத்தின் தேசிய மொழித் **தகைமை மதிப்பீட்டுப் பரீட்சையில் சித்தியடைந்த** உத்தியோகத்தர்களுக்கு சான்றிதழ்கள் வழங்குதல், பாடசாலை நூலகங்களுக்கு புத்தகங்கள் வழங்குதல் முதலான பல்வேறு சிறப்பம்சங்களுடன் சிங்கள மொழித் தினம் வெற்றிகரமாக நடாத்தப்பட்டது. இந்நிகழ்வின் பிரதான உரை பேராசிரியர் சந்தகோமி கோபரஹேவா அவர்களால் நடாத்தப்பட்டது.







**03. தமிழ் மொழித் தினத்திற்கு சமாந்திரமாக நடாத்தப்பட்ட தமிழ் மொழி மேம்பாட்டு நிகழ்ச்சித் தொடர்**

**முதலாவது நிகழ்ச்சி - 2025.10.25**

**“தமிழ் மொழியின் வரலாற்றுப் முக்கியத்துவமும் கலாசார விழுமியங்களும்”**

2025 ஆம் வருடத்தில் தமிழ் மொழி தினத்தை மென்மேலும் அர்த்தமுள்ள விதத்திலும், பயனுள்ள விதத்திலும் கொண்டாடும் நோக்கத்தின் அடிப்படையில் 2025.08.13 ஆம் திகதி யாழ்ப்பாணம் தமிழ் சங்கம், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் மொழி மற்றும் ஆங்கிலக் கற்கைப் பிரிவு மற்றும் யாழ்ப்பாணம் பொது நூலகம் என்பவற்றுடன் இணைந்ததாக கலந்துரையாடல் சுற்றொன்று நடாத்தப்பட்டது. இதன்போது யாழ்ப்பாணம் தமிழ் சங்கத்துடன் இடம்பெற்ற கலந்துரையாடலுக்கு அமைய இலங்கையின் தமிழ் மொழியின் அடையாளங்களும், தமிழ் கலாசாரத்தின் அடையாளங்களும் பிரதிபலிக்கும் விதத்தில் ஒவ்வொரு வருடமும் ஜூலை மாதம் 19 ஆம் திகதி சுவாமி விபுலானந்தர் ஞாபகார்த் தினத்தை “தமிழ் மொழித் தினம்” ஆகக் கொண்டாடுவது மிகப் பொருத்தமானதென பரிந்துரைக்கப்பட்டது.

அதற்கமைய, 2026 ஆம் வருடத்தில் தமிழ் மொழி தினத்திற்குச் சமாந்திரமாக தமிழ் மொழி சம்பந்தமாக 03 அறிஞர்கள் கலந்துரையாடல்களை நடாத்துவதற்கு யோசனை முன்வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் தமிழ் சங்கமும் அரசகரும மொழிகள் திணைக்களமும் இணைந்து ஏற்பாடு செய்த இதன் முதல் நிகழ்ச்சி “**தமிழ் மொழியின் வரலாற்று முக்கியத்துவமும் கலாசார விழுமியங்களும்**” எனும் தலைப்பில் 2025 அக்டோபர் 25 ஆம் திகதி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலக கேட்போர்கூடத்தில் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலின்போது இலங்கைத் தமிழ் மொழியின் தனிச்சிறப்பு, வரலாற்று பெறுமதி மற்றும் கலாசார விழுமியங்கள் ஆராயப்பட்டதுடன், தற்சமயம் இலங்கைத் தமிழ் மொழி மீது இந்தியத் தமிழ் மொழியினதும் பிற மொழிகளினதும் தாக்கங்கள் சம்பந்தமாகவும் கவனம் செலுத்தப்பட்டது.

தமிழ் மொழியின் இலங்கைத் தனித்துவத்தை பாதுகாப்பது இன்றைய காலகட்டத்தில் முக்கிய சவாலாக உள்ளதையும், அதற்காக அரசாங்கத்தின் தலையீடு, கல்வித் துறையின் பங்களிப்பு மற்றும் பொதுமக்களின் விழிப்புணர்வு முதலான விடயங்கள் கவனத்திற்கொள்ளப்பட்டன.

“தமிழ் மொழி” தொடர்பாக யாழ்ப்பாண மாநகரை மையமாகக் கொண்டு அரச நிறுவனமொன்றினால் ஏற்பாடு செய்யப்பட்ட முதலாவது நிகழ்ச்சியாக இக் கலந்துரையாடல் பாராட்டிற்கு உட்படுத்தப்பட்டது.





**அரசகரும மொழிகள் வாரம் வவுனியா மாவட்டச் செயலகத்துடன்**

04. **அரசகரும மொழிகள் வாரத்திற்குச் சமாந்திரமாக** பொதுமக்களை தெளிவூட்டல்.

இலங்கையில் அரசகரும மொழிக் கொள்கை நடைமுறைப்படுத்தப்படுவதையும், மொழி உரிமை பாதுகாக்கப்படுவதையும் நோக்காகக் கொண்டு, ஒவ்வொரு வருடமும் யூலை மாதம் 01 திகதி தொடக்கம் 05 ஆம் திகதி வரை அரசகரும **மொழிகள் வாரம்** கொண்டாடப்படுகிறது. இது அமைச்சை பிரதானமாகக் கொண்டு அரசகரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்தும் அனைத்து அரச நிறுவனங்களும் இணைந்து நடைமுறைப்படுத்துகின்ற மிக முக்கிய பணியாகும். மொழி ரீதியான சகவாழ்வு, அரச நிறுவனங்களில் அரசகரும மொழிக் கொள்கை அமுல்செய்யப்படுவது தொடர்பாக கண்காணித்தல், மொழி மேம்பாட்டு நிகழ்ச்சிகளை நடாத்துதல் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகளுடகூடியதாக அரசகரும மொழிகள் வாரம் அமுல்செய்யப்படுகின்றது. "மொழியை வளர்ப்போம் - உள்ளங்களை வெல்வோம்" என்ற தொனிப்பொருளின் கீழ், பொதுமக்கள் தினத்தை கொண்டாடுவதற்கு அரசகரும மொழிகள் திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டது. 2025 ஆம் வருடத்தில் வட மாகாணத்தை மையமாகக் கொண்டு பொதுமக்கள் தினம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இதன்போது வவுனியா மாவட்டச் செயலகத்தை பிரதானமாகக்கொண்டு அரச நிறுவனங்களையும் பாடசாலைகளையும் இணைத்துக்கொண்டு பல்வேறு நிகழ்ச்சிகளுடன்கூடியதாக 2025.07.03 ஆம் திகதி வவுனியா மாவட்டச் செயலகத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டது. இந் நிகழ்வின் பிரதான அதிதியாக தேசிய ஒருமைப்பாட்டு பிரதி அமைச்சர் கௌரப முனீர் முலப்பர் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார். மேலும் அரசகரும மொழிகள் வாரத்தின் நிறைவு விழா 2025.07.07 ஆம் திகதி இலங்கை மன்றக் கல்லூரியில் மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது.




**அரசகரும மொழிகள் வாரம் வவுனியா மாவட்டச் செயலகத்துடன்**

05. **சர்வதேச மொழிபெயர்ப்பு தினக் கொண்டாட்டம்**

